முழுப்பதிப்புரிமையுடையது


அந்தரங்கமானது

# இலங்கை பரீட்சைத் திணைக்களம்

## க.பொ.த. (சாதாரண தர)ப் பரீட்சை - 2023 (2024)

## 87 – தொடர்பாடலும் ஊடகக்கற்கையும்

## புள்ளியிடும் திட்டம்



இந்த விடைத்தாள் பரீட்சகர்களின் உபயோகத்துக்காகத் தயாரிக்கப்பட்டது. பிரதம பரீட்சகர்களின் கலந்துரையாடல் நடைபெறும் சந்தர்ப்பத்தில் பரிமாறிக்கொள்ளும் கருத்துக்களுக்கிணங்க, இதில் உள்ள சில விடயங்கள் மாறலாம்.

இறுதித் திருத்தங்கள் உள்ளடக்கப்படவுள்ளன.

## கல்விப் பொது தராதரப் பத்திர (சாதாரண தர)ப் பரீட்சை - 2023 (2024)
## 87 - தொடர்பாடலும் ஊடகக்கற்கையும்

### தொடர்பாடலும் ஊடகக்கற்கையும் I

**1 ஆம் வினாத்தாளின் 40 வினாக்கள்**

1 x 40 = 40 புள்ளிகள்

### தொடர்பாடலும் ஊடகக்கற்கையும் II

**1 ஆம் வினா கட்டாயமானது**

ஒவ்வொரு பிரிவுக்கும் 2 புள்ளிகள் வீதம் பத்து வினாக்கள் 2 x 10 = 20 புள்ளிகள்

**2 முதல் 7 ஆம் வினாக்கள்**

தெரிவு செய்யப்பட்ட 4 வினாக்களுக்கு 4 x 10 = 40 புள்ளிகள்

**மொத்தம் 100 புள்ளிகள்**

**பகுதி வினாக்களுக்கான புள்ளிகள்**

(2 ஆம் வினாவில் இருந்து 7 ஆம் வினா வரை)

| | | |
|---|---|---|
| (i) - | பகுதி | 01 புள்ளிகள் |
| (ii) - | பகுதி | 02 புள்ளிகள் |
| (iii)- | பகுதி | 03 புள்ளிகள் |
| (iv)- | பகுதி | 04 புள்ளிகள் |
| | | 10 புள்ளிகள் |

| | | |
|---|---|---|
| வினாத்தாள் I | மொத்தம் | 40 புள்ளிகள் |
| வினாத்தாள் II | மொத்தம் | 60 புள்ளிகள் |
| | | 100 புள்ளிகள் |

ශ්‍රී ලංකා විභාග දෙපාර්තමේන්තුව
இலங்கைப் பரீட்சைத் திணைக்களம்

අ.පො.ස (සා.පෙළ) විභාගය / க.பொ.த. (சாதாரண தர)ப் பரீட்சை - 2023 (2024)

විෂය අංකය / பாட இலக்கம்: **87**

විෂයය / பாடம்: **தொடர்பாடலும் ஊடகக்கற்கையும்**

ලකුණු දීමේ පටිපාටිය / புள்ளி வழங்கும் திட்டம்

I පත්‍රය / பத்திரம் I

| ප්‍රශ්න අංකය வினா இல. | පිළිතුරු අංකය விடை இல. | ප්‍රශ්න අංකය வினா இல. | පිළිතුරු අංකය விடை இல. | ප්‍රශ්න අංකය வினா இல. | පිළිතුරු අංකය விடை இல. | ප්‍රශ්න අංකය வினா இல. | පිළිතුරු අංකය விடை இல. |
|---|---|---|---|---|---|---|---|
| 01. | 01 | 11. | 02 | 21. | 03 | 31. | 03 |
| 02. | 02 | 12. | 01 | 22. | 02 | 32. | 04 |
| 03. | 03 | 13. | 02 | 23. | 02 | 33. | 03 |
| 04. | 01 | 14. | 01 | 24. | 04 | 34. | 03 |
| 05. | 02 | 15. | 04 | 25. | 02 | 35. | 04 |
| 06. | 02 | 16. | 03 | 26. | 01 | 36. | 01 |
| 07. | 01 | 17. | 03 | 27. | 03 | 37. | 02 |
| 08. | 02 | 18. | 04 | 28. | 03 | 38. | 04 |
| 09. | 02 | 19. | 04/03 | 29. | 01 | 39. | 03 |
| 10. | 04 | 20. | 02 | 30. | 02 | 40. | 01 |

විශේෂ උපදෙස් / விசேட அறிவுறுத்தல் :

එක් පිළිතුරකට / ஒரு சரியான விடைக்கு 01 ලකුණු බැගින් / புள்ளி வீதம்

මුළු ලකුණු / மொத்தப் புள்ளிகள் 1 x 40 = 40

# தொடர்பாடலும் ஊடகக்கற்கையும் II

1. தொலைபேசி கண்டுபிடிக்கப்பட்டதற்குப் பின்னர் நடைபெற்ற தொழில்நுட்ப முன்னேற்றமானது தொடர்பாடல் களத்தில் புரட்சிகரமானதொரு மாற்றத்தை ஏற்படுத்தியது.

(i) தொலைபேசியைக் கண்டுபிடித்தவர் யார்?

**அலெக்ஸாண்டர் கிரகம் பெல்** (2 புள்ளிகள்)

(ii) ஆரம்ப காலகட்டத்தில் எந்த வகைத் தொடர்பாடலுக்காகத் தொலைபேசி பயன்படுத்தப்பட்டது?

**ஆளிடைத் தொடர்பாடல் / சோடித் தொடர்பாடல்** (2 புள்ளிகள்)

(iii) தொலைபேசி வீடியோ அழைப்பில், பெறுநரின் தோற்றத்தை ஒருவரால் காணமுடியும். இந்தச் சூழலில் பயன்படக் கூடுமான இரண்டு வாய்மொழி சாராத் தொடர்பாடல் முறைகளைப் பெயரிடுக.

- **அங்க அசைவுகள் மற்றும் சைகைகள்**
- **முகபாவம் மற்றும் சமிக்ஞைகள்**
- **கண்தொடர்பு**
- **ஆடை அணிகலன்**
- **மொழித்துணை இயல்புகள் (தொனி, மௌனம், வேகம், உச்சரிப்பு)**
- **தொடுகை** (2 புள்ளிகள்)

(iv) தொலைபேசி வழியாக மாநாட்டு அழைப்பு (conference call) மேற்கொள்ளப்படும்போது எவ்வகைத் தொடர்பாடல் பயன்படுத்தப்படுகின்றது?

**குழுத் தொடர்பாடல்/ சமூகத் தொடர்பாடல் / கூட்டுத் தொடர்பாடல்** (2 புள்ளிகள்)

(v) தொலைபேசி பயன்படுத்த முடியாத பிரதான தொடர்பாடல் வகை எது?

**ஆளுள் தொடர்பாடல்** (2 புள்ளிகள்)

(vi) செல்பேசியைப் பயன்படுத்தும்போது பின்பற்றவேண்டிய இரண்டு ஒழுக்கநெறிகளைக் குறிப்பிடுக.

- **மறுமுனையில் இருப்பவர் தொலைபேசி அழைப்பைப் பெற்றுக்கொண்டதன் பின்னர் அழைப்பை மேற்கொண்டவர் தன் அடையாளத்தை வெளிப்படுத்த வேண்டும்.**
- **அழைப்பினை ஏற்படுத்தும்போதும் பெற்றுக் கொள்ளும்போதும் ஒழுக்கநெறியுடன் பேசுதல் வேண்டும்.**
- **கூறவேண்டிய விடயத்தை மிகவும் சுருக்கமாகக் கூறுதல்வேண்டும்.**
- **தொலைபேசி அழைப்பின் மூலம் தீர்க்கமுடியாத வினாக்களை வினவாதிருத்தல் வேண்டும்.**
- **தமக்குத் தெரியாத நபர்களிடமிருந்து வந்த தவறவிட்ட அழைப்புக்களுக்குத் துலங்கல் காட்டாதிருத்தல் வேண்டும்.**
- **தாம் அறிந்திராத நபர்களிடமிருநடது வந்த குறுஞ்செய்திகளுக்குத் துலங்கல் காட்டாதிருத்தல் வேண்டும்.**
- **தொலைபேசியைத் தமது தனிப்பட்ட வாழ்க்கைக்கு ஓர் தடையாக அமையவிடாதிருத்தல் வேண்டும்.**
- **தொலைபேசிப் பாவனை பணத்துடன் தொடர்புடையதொன்று என்பதை மனதிலிருத்தல் வேண்டும்.**

- மற்றையவர்களை ஏமாற்றுவதற்காக தொலைபேசியைப் பயன்படுத்தாதிருத்தல் வேண்டும்.
- பிறர் வேலைச்சுமையில் இருக்கும்போதும் நித்திரை அல்லது ஓய்வெடுக்கும் சந்தர்ப்பங்களின் போதும் தொல்லைப்படுத்துதற்காக அதனைப் பயன்படுத்தாதிருத்தல் வேண்டும்.
- மற்றவர்களுக்கு இடையூறு விளைவிக்கும் விதத்தில் சத்தத்தை எழுப்பித் தொலைபேசியில் பேசாதிருத்தல் வேண்டும்.
- திரையரங்கு, நூல்நிலையம், கூட்டங்கள், பொது இடங்களில் தொலைபேசியை செயல் இழக்கச் செய்து அல்லது நிசப்தமாக்கி வைத்திருத்தல் வேண்டும்.

(2 புள்ளிகள்)

(vii) திறன்பேசியொன்றின் ஊடாக இணையத்தை நீங்கள் அணுகமுடியும். தொடரிணை வழியே நீங்கள் அணுகமுடியுமான இரண்டு சமூக ஊடகங்களைப் பெயரிடுக.

- Facebook (முகநூல்)
- LinkedIn
- Instagram
- YouTube
- Twitter
- Tiktok
- Telegram
- Snapchat
- WhatsApp
- Wechat

(2 புள்ளிகள்)

**(இதுபோன்ற வேறு சமூக ஊடகங்கள் குறிப்பிடப்பட்டிருப்பின் பரீட்சித்து உறுதிப்படுத்தி புள்ளி வழங்குக.)**

(viii) இணையத் தொடர்பைக் கொண்ட திறன்பேசி வழியாக மின்னஞ்சல் (email) வசதியை நீங்கள் பெற்றுக்கொள்ள முடியும். இன்னுமொரு தரப்புக்கு மின்னஞ்சல் அனுப்பும்போது, அந்தத் தரப்பின் பிரதான அம்சம் எதுபற்றி நீங்கள் அவசியம் அறிந்திருக்க வேண்டும்?

மின்னஞ்சல் முகவரி (Email Address) (2 புள்ளிகள்)

(ix) இணையத்தில் வேறுபட்ட வகைத் தகவல்களைத் தேடுவதற்குப் பயன்படக்கூடுமான தேடற்பொறியொன்றைப் (search engine) பெயரிடுக.

- Google
- Yahoo
- ASK.com
- Firefox
- Baidu
- Siri
- Bing
- Altavista

(2 புள்ளிகள்)

(x) இணையத்தினூடாக நபரொருவர் 'இணைந்த ஊடகம் / ஊடகக் குவிகை'ச் சூழலொன்றின் அனுபவத்தைப் பெறமுடியும். இணைந்த ஊடகம் / ஊடகக் குவிகை என்றால் என்ன?

**ஊடகக் குவிகை**

**எல்லா ஊடகங்களும் ஒரே தளத்தில் இணைந்திருத்தலே ஊடகக் குவிகை எனப்படும். (அதாவது இணையத்தின் அறிமுகம் காரணமாக அனைத்து ஊடகங்களும் ஒன்றிணைதல். இணையத்தின் உதவியுடன் ஒரே தளத்தில் பத்திரிகை வாசிக்கலாம், வானொலி கேட்கலாம், தொலைக்காட்சி பார்க்கலாம், உரையாடல் செய்யலாம், புத்தகங்கள் மற்றும் சஞ்சிகைகள் வாசிக்கலாம் போன்ற செயற்பாடுகள் இடம்பெறும்.)**

(2 புள்ளிகள்)

**(மொத்தப் புள்ளிகள் 2 × 10 = 20 புள்ளிகள்)**

2. (i) இலங்கையில் முதலாவதாக வெளியிடப்பட்ட தமிழ் செய்திப்பத்திரிகை எது?

**( 01 புள்ளி )**

**உதய தாரகை**

(ii) அளவின் அடிப்படையில் செய்திப்பத்திரிகைகளின் இரண்டு பிரதான வகைகளைப் பெயரிடுக.

- புரோட் சீட் – Broadsheet
- டப்லொய்ட் – Tabloid
- பேர்லினர் – Berliner

**( 2 × 1 புள்ளி = 02 புள்ளிகள் )**

(iii) புகைப்படங்கள் வேறுபட்ட தேவைகளுக்காகப் பயன்படுத்தப்படுகின்றன. பின்வரும் புகைப்படவகைகளைச் சுருக்கமாக விபரிக்குக.

(அ) அறிக்கையிடலுக்கான புகைப்படங்கள்

(ஆ) செய்திப் புகைப்படங்கள்

(இ) படைப்பாக்கப் புகைப்படங்கள்

**(அ) அறிக்கையிடலுக்கான புகைப்படங்கள்**

- **புகைப்படமொன்றின் துல்லியத்தன்மையானது உருவொன்றினை அதே நிலையில் பிரதிபலிக்க கூடிய திறனில் தங்கியுள்ளது.**
- **புகைப்படத்தைப் பார்ப்பவருக்கு விளங்கக்கூடிய வகையில் விளக்கமான தகவல்கள் நிை பெற்றிருக்க வேண்டும்.**
- **ஏதேனும் ஒரு நிகழ்வுடன் தொடர்புடைய புகைப்படங்கள் வழங்கப்படல் வேண்டும்.**

**(ஆ) செய்திப் புகைப்படங்கள்**

- **செய்திப்பெறுமானங்களைக் கொண்ட நிகழ்வுகளே செய்திப் புகைப்படங்களின் கருப்பொருட்க ஆகும்.**
- **சந்தர்ப்பத்திற்றேப துல்லியமாதல், அழுத்தம், அண்மைத் தூரம், மனித விருப்பு, ஒப்பற் தன்மை புதுமை, மோதல்கள் போன்ற செய்திகளுக்கான குணாம்சங்கள் புகைப்படங்களி அடங்கியிருக்கும்.**

**(இ) படைப்பாக்கபூர்வமான புகைப்படங்கள்**

- படைப்பாக்க முறைகளைக் கையாண்டு புகைப்படங்களில் மறைமுக எண்ணங்களை வெளிப்படுத்த முடியும்.
- புகைப்படப் படைப்பாளியின் புதுமை, படைப்பு திறன், தனிப்பட்ட பார்வை கோணம் போன்றவற்றின் மூலம் ஆக்கபூர்வமான புகைப்படத்தை உருவாக்க முடியும்.
- அர்ப்பணிப்புடன் கூடிய அனுபவப் பயிற்சிகளின் மூலம் சிறந்த படைப்பாக்கப் புகைப்படத்தை உருவாக்க முடியும்.

கீழ்குறிப்பிடப்பட்டுள்ள பண்புகள் அனைத்துப் புகைப்பட வகைகளுக்கும் பொருந்தும்.

- குறிப்பிட்ட அனைத்து விடயங்களும் அடங்கியிருத்தல்.
- அவசியமற்றவைகள் உட்படுத்தப்படாமை.
- புகைப்படத்தில் குறிப்பிட்ட விம்பத்திற்கு உயிரோட்டத்தை வழங்குதல்.
- முறையான கமெராக் கோணங்கள்.
- முறையான ஒளிப் பிரவாகம்.
- முறையான வெளியீடு.
- புகைப்படத்தை எடுக்கும் உரிய சந்தர்ப்பம்.

**( 3 x1 புள்ளி = 03 புள்ளிகள் )**

(iv) செய்திப்பத்திரிகை நிறுவனங்களுடன் தொடர்புடைய பின்வரும் ஊடகப் பணியாளர்களின் பணிகளைத் தனித்தனியாகக் கலந்துரையாடுக.

(அ) பதவிநிலை நிருபர்கள் அல்லது அலுவலக நிருபர்கள்

(ஆ) மாகாண நிருபர்கள்

**(அ) பதவிநிலை நிருபர்கள் அல்லது அலுவலக நிருபர்கள்**

- இவர்கள் தொழில்சார் ஊடகவியலாளர்கள் என அழைக்கப்படுவர்.
- வெகுசன ஊடகத்தில் மாதாந்தம் சம்பளம் பெறுகின்ற ஊடகவியலாளர்கள் ஆவர்.
- நிறுவனத்தினுள் அல்லது நிறுவனத்தினால் ஈடுபடுத்தப்படுகின்ற ஊடகப்பணிகளை நிறைவேற்றும் கடமையுடையவர்கள் ஆவர்.
- சம்பளத்திற்கு மேலதிகமாக சேவை வசதிகள், சலுகைகள், பதவி உயர்வுகள் என்பன இவர்களுக்கு உரித்தாகும்.

**(ஆ) மாகாண நிருபர்கள்**

- பகுதிநேர அடிப்படையில் ஒரு ஊடக நிறுவனத்திற்குச் சேவையை வழங்குவர்.
- ஊடக நிறுவனங்களுடன் ஒப்பந்த அடிப்படையில் இணைக்கப்பட்டிருப்பர்.
- தமது சேவையின் நிமித்தம் மாத்திரம் ஊடகத்துடன் தொடர்புபட்டிருப்பர்.
- வேறு நிறுவனங்களில் பணிபுரிந்து கொண்டோ அல்லது ஓய்வு பெற்றதன் பின்னரோ பணியாற்ற முடியும்.
- வழங்கப்படும் தகவல்களுக்கு ஏற்ப கொடுப்பனவு வழங்கப்படும்.
- குறிப்பிட்ட பிரதேச வரையறைக்குட்பட்டுச் சேவையை வழங்குவர்.

இரு விடயங்களையும் தெளிவாக விளக்கியிருப்பின் முழுப் புள்ளிகள் வழங்குக.

**(2 x 2 புள்ளிகள் = 04 புள்ளிகள் )**

3. (i) அன்றாடத் தொடர்பாடலில் பயன்படும் இரண்டு உடலியல் சார்ந்த அம்சங்களைப் பெயரிடுக.

- அங்க அசைவுகள் மற்றும் சைகைகள்
- முகபாவனை மற்றும் சமிக்ஞைகள்
- கண் தொடர்புகள்
- தொடுகை
- வாசனை

**(இரண்டு விடயங்களைக் குறிப்பிட்டிருப்பின் 01 புள்ளி வழங்குக)**

**(2 x 1/2 புள்ளி = 01 புள்ளி)**

(ii) ஹரோல்ட் டீ லாஸ்வெல்லினால் வழங்கப்பட்ட தொடர்பாடல் வரைவிலக்கணத்தை எழுதுக.

**"எவரேனும் ஒருவர், ஏதேனும் ஒன்றைப்பற்றி, குறிப்பிட்டதொரு செல்வழியில், குறிப்பிட்ட ஒருவருக்கு, ஏதேனும் விளைவு ஒன்றை நோக்கி முன்வைக்கின்ற விடயமே தொடர்பாடல் ஆகும்".**

**(02 புள்ளிகள்)**

(iii) அலுவலகத் தொடர்பாடல் கருவியாக தபால் முத்திரையிடல் இயந்திரம் பயன்படுத்தப்படுவதுடன் தொடர்புடைய மூன்று அம்சங்களைச் சுருக்கமாக விபரிக்குக.

- தபால் சேவையின் வினைத்திறனை அதிகரிக்கலாம்.
- முத்திரை ஒட்டும் காலம் மீதப்படுத்தப்படும் .
- தவறான முத்திரையிடல் மற்றும் முத்திரை காணாமற்போதல் என்பவற்றைத் தவிர்க்கலாம்.
- முத்திரையிடும் கருவியை ஓர் அதிகாரி தன்வசம் வைத்திருப்பதன் மூலம் மோசடிகள் தவிர்க்கப்படும்

**(3 x 1 புள்ளி = 03 புள்ளிகள்**

(iv) செய்திப்பத்திரிகை நிறுவனமொன்றில் காணப்படக் கூடிய பின்வரும் பிரிவுகளின் செயற்பாடுகளுடன் தொடர்புடைய இரண்டு அம்சங்களை ஒவ்வொன்றுக்குமாக விபரிக்குக.

(அ) செய்திப்பிரிவு (news section)

(ஆ) சிறப்பு அம்சப் பிரிவு (feature section)

**(அ) செய்திப்பிரிவு** (News Section)

- நாளாந்த அல்லது வாராந்த செய்திப்பத்திரிகையின் மிக முக்கிய பணியை ஆற்றும் பிரிவு இதுவாகும்.
- இதில் உள்ளூர்ச் செய்தி, வெளியூர்ச் செய்தி என இரு பிரிவுகள் காணப்படும்.
- இவ் இரு செய்திப்பிரிவுகளுக்கும் வெவ்வேறான பதிப்பாசிரியர்கள் காணப்படுவர்.
- இவ் இரு செய்திப்பிரிவுகளிலும் நிரந்தர பதவியுடைய நிருபர்கள் மற்றும் பிரதேச நிருபர்களது சேவை பெற்றுக்கொள்ளப்படும்.

**(அ) சிறப்பு அம்சப்பிரிவு** (Feature Section)

- செய்திகளுக்கு மேலதிகமாகப் பல்வேறு சிறப்புத் தலைப்புகளின் கீழ் ஆக்கங்கள் அல்லது பக்கங்கள் செய்தித்தாளில் பிரசுரிக்கப்படுவது இப்பிரிவின் மூலமாகும். (உதாரணமாக மகளிர், சிறுவர், சமயம், வணிகம், சுற்றாடல், விளையாட்டு, சினிமா, நாடகம், இலக்கியம் தொடர்பான ஆக்கங்கள் அல்லது பக்கங்கள்)
- சிறப்பம்சப் பிரிவின் மூலம் வாசகர் வட்டத்தை அதிகரிக்கலாம்.
- சிறப்பம்சப் பிரிவிற்கென ஆசிரியர் ஒருவர் பணியாற்றுவார். சிறப்பம்சங்களைத் தயாரிக்கும் பணி இவருடையதே.
- கார்ட்டூன், கேலிச்சித்திரம் என்பனவும் சிறப்பம்சங்களே.

**(இவ் விடயங்களை இவ்விரண்டு அம்சங்களுடன் விளக்கியிருப்பின் முழுப்புள்ளிகள் வழங்குக)**

**(2 x 2 = 04 புள்ளிகள்)**

4. (i) ஆசியாவில் முதலாவது வானொலி ஒலிபரப்புச் சேவையை ஆரம்பித்த நாடு எது?

**இலங்கை**

**(01 புள்ளி)**

(ii) உரிமையாண்மையுடன் தொடர்புடையதான அரசாங்கத்தின் பங்களிப்புடன் இயங்கும் இரண்டு உள்ளூர் வானொலி நிறுவனங்களைப் பெயரிடுக.

- இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபனம் (SLBC)
- லக்ஹண்ட வானொலி (ITN)

**(2 x 1 புள்ளி = 02 புள்ளிகள்)**

(iii) வானொலி ஊடகத்தினைப் பயன்படுத்துவதன் ஊடாக சிறுவர்கள் பெற்றுக்கொள்ள முடியுமான மூன்று கற்றல் வெளிகளைச் சுருக்கமாக விபரிக்குக.

- செவிமடுத்தல் திறன் அதிகரிக்கும்.
- வெவ்வேறு சொற்கள் மற்றும் வாக்கிய வடிவங்களை அறிந்துக் கொள்ளலாம்.
- வெவ்வேறு கதைப்பாணிகளை அறிந்து கொள்ளலாம்.
- கற்பனைத்திறன் வளரும்.
- அழகியல் சிந்தனைகள் வளர்க்கப்படுகின்றன.
- இசை, நகைச்சுவை, பல்சுவை மற்றும் மகிழ்வாக இருக்கப் பழகிக் கொள்ளலாம்.

**(சுருக்கமாக விபரித்திருத்தல் வேண்டும்)**

**(3 x 1 புள்ளி = 03 புள்ளிகள்)**

(iv) போல் டீ மெசுனியர் முன்வைத்த நான்கு அம்சங்களின் முக்கியத்துவத்தை வானொலிச் செய்தி அறிக்கையிடலுடன் தொடர்புடையதாகத் தனித்தனியே விளக்குக.

**துல்லியம், நடுநிலைமை, தெளிவு, நம்பகத்தன்மை**

**துல்லியம்**

செய்தி அறிக்கையிடலின்போது மிகவும் முக்கியமான அம்சமாகத் துல்லியத்தன்மை காணப்படுகின்றது. செய்தியுடன் தொடர்புடைய சகல விடயங்களும் உண்மையானவையாக இருத்தல் வேண்டும். அச்செய்தியை மீளவும் உறுதிப்படுத்திக் கொள்ளக்கூடியதாக இருத்தல் வேண்டும். இதன்போது குறிக்கப்பட்ட அந்நிகழ்வு, நபர்களது பெயர்கள், அவர்களது தொழில்கள், இடம், காலம் மற்றும் தகவல் மூலம் என்பன துல்லியமானவையாகக் காணப்படுதல் அவசியம்.

**நடுநிலைமை**

செய்தி பக்கச்சார்பற்றதாகக் காணப்படுதலாகும். தனிப்பட்ட விருப்பு வெறுப்பு, நன்மை, அபிப்பிராயம், குறிக்கோள்கள் என்பவற்றுக்கு அப்பால் செய்தியில் சகல தரப்பினரையும் பிரதிநிதித்துவம் செய்து நடுநிலைமையுடன் அறிக்கையிடல் செய்ய வேண்டும். செய்தியின் பெறுமானத்தை அதிகரிப்பது நடுநிலைத்தன்மையாகும். நிகழ்வுடன் தொடர்புடைய சகல தரப்பினரதும் செய்தியையும் சமநிலையுடன் அறிக்கையிடல் இதன் மூலம் எதிர்பார்க்கப்படுகின்றது.

**தெளிவு**

செய்தியில் தெளிவுத்தன்மை என்பது எளிமையான, சிக்கல் இல்லாத மொழிநடையைப் பயன்படுத்துவதாகும். சிக்கலான மொழிநடை, பிழையான உச்சரிப்பு என்பவற்றைத் தவிர்த்தல் தெளிவுத்தன்மையை அதிகரிக்கும். அனைவராலும் விளங்கிக்கொள்ளக்கூடிய மொழிநடையைப் பயன்படுத்துதல் மற்றும் செய்தியை ஓர் ஒழுங்குமுறைக்கூடாக முன்வைப்பது செய்தியின் தெளிவுத்தன்மையை அதிகரிக்கும்.

**நம்பகத்தன்மை**

துல்லியம், நடுநிலைமை மற்றும் தெளிவு என்பன ஒன்றுசேரும்போது செய்தியின்மீது நம்பகத்தன்மை உருவாக்கப்படும். இவற்றில் ஒன்று குறைவடைவினும் நம்பகத்தன்மையின் வரையறை குறைகிறது. ஓர் செய்தி நிறுவனம் தொடர்பான பிரதிமையை ஏற்படுத்துவதில் நம்பகத்தன்மை அதிக தாக்கத்தைச் செலுத்துகின்றது.

**(4 × 1 புள்ளி = 04 புள்ளிகள்)**

**5.** பெறுநர்களுக்குப் படைப்பாக்கச் செய்திகளை அனுப்பும்போது வெகுசன ஊடகங்கள் ஒழுக்கநெறிகளின்பால் அவசியம் கவனஞ்செலுத்த வேண்டும்.

(i) படைப்பாக்கமொன்றில் காணக்கிடைக்கக் கூடிய இரண்டு பண்புகளை எழுதுக.

- புதுமை.
- விஷேட இயல்பு.
- பயன்பாட்டு இயலுமை.
- அர்த்தச் செறிவு.
- தரமான தொடர்பாடல்.
- உயர் இரசனை.

- உணர்வுபூர்வமானது.
- உண்மை என ஏற்றுக் கொள்ளக் கூடியது.
- விமர்சனரீதியாகச் சிந்திக்கும் திறன்.
- தனித்துவம்.

**(இவற்றில் இரண்டு குறிப்பிடப்பட்டிருப்பதால் மாத்திரம் புள்ளிகள் வழங்குக)**

**(2 × 1/2 புள்ளி = 01 புள்ளி)**

(ii) இலங்கையில் வெகுசன ஊடகப் பயன்பாட்டுடன் தொடர்புடைய இரண்டு ஒழுக்கநெறிக் கோவைகளைப் பெயரிடுக.

- இலங்கை பத்திரிகை ஆசிரியர் சங்கத்தின் ஒழுக்கநெறிக் கோவை.
- இலங்கைப் பத்திரிகை முறைப்பாட்டு ஆணைக்குழுவின் ஒழுக்கநெறிக் கோவை.
- சர்வதேச ஊடகவியலாளர் சம்மேளனத்தின் ஒழுக்கநெறிக் கோவை.

**(2 ×1 புள்ளி = 02 புள்ளிகள்)**

(iii) தொலைக்காட்சி ஊடகத்தின் மூன்று இயல்புகளைச் சுருக்கமாக விபரிக்குக.

- தொலைக்காட்சி ஒரு கட்புல செவிப்புல ஊடகம்.
- தொலைக்காட்சி ஒரு நெருக்கமான ஊடகம்.
- தொலைக்காட்சி ஒரு நேரடி ஊடகம்.
- தொலைக்காட்சி ஒரு வெகுசன ஊடகம்.
- தொலைக்காட்சி ஒரு கவர்ச்சியான ஊடகம்.
- தொலைக்காட்சி ஒரு அதிக செலவுடைய ஊடகம்.
- தொலைக்காட்சி ஒரு ஸ்திரமற்ற ஊடகம்.
- தொலைக்காட்சி ஒரு இலத்திரனியல் ஊடகம்.

**(3 ×1 புள்ளி = 03 புள்ளிகள்)**

(iv) 'தொலைக்காட்சி ஊடகத்திற்கும் பெறுநருக்கும் இடையிலான பரஸ்பரச் செல்வாக்கு' பற்றி பின்வரும் அம்சங்களின் பேரில் பாடசாலைச் சுவர்ப் பத்திரிகைக்கான கட்டுரையொன்றைத் தயாரிக்குக.

(அ) தொலைக்காட்சி பெறுநரின் நடத்தையை மாற்றுகிறது.

(ஆ) தொலைக்காட்சி அன்றாட நிகழ்ச்சிநிரலைத் தயாரிக்கிறது.

**(அ) தொலைக்காட்சி பெறுநரின் நடத்தையை மாற்றுகிறது.**

- பிரபலமான ஆடை, அலங்காரம், விருப்பமான உணவு , பேசுகின்ற மொழி, பயன்படுகின்ற கருவிகள் ஆகியன ஊடகத் தகவல்கள் மூலம் எமக்கு அறிமுகம் செய்யப்படுபவையாகும்.
- பெறுநர்களின் கொள்வனவுப் போக்கில் நடத்தையை மாற்றுகிறது.
- பெறுநர்களின் தனிப்பட்ட உறவுகள் பேணப்படுவதைப் பாதிக்கிறது.
- நன்மையான மற்றும் தீமையான பழக்கவழக்கங்களைத் தூண்டுகிறது.
- பின்பற்றுதல்.
- அடிமையாகுதல்.

- சோம்பேறிகளாகுதல்.

**(ஆ) தொலைக்காட்சி அன்றாட நிகழ்ச்சிநிரலைத் தயாரிக்கிறது.**

- அன்றாடக் கடமைகளில் காலையில் எழுதல், படித்தல், உணவு உட்கொள்ளல், ஓய்வெடுத்தல் மற்றும் நாளாந்த நடவடிக்கைகளைத் திட்டமிடுதல் ஊடக நிகழ்ச்சி நிரல்களின் நேர அட்டவணைக்கு ஏற்பவே ஆகும்.
- தொலைக்காட்சி நிகழ்ச்சி நிரலுக்கு ஏற்ப பெறுநர்களின் அன்றாட நிகழ்ச்சி நிரல் தீர்மானிக்கப்படுகின்றது.
- தொலைக்காட்சி வெளிப்படுத்தும் அரசியல், சமூக, பொருளாதார விடயங்கள் பற்றிய முன்னுரிமைப் பட்டியலுக்கு ஒத்திசைவானதாக பெறுநர்களின் முன்னுரிமைப் பட்டியலும் அமையும்.

**(இவ்விடயங்கள் யாவும் தொலைக்காட்சியுடன் சம்பந்தப்படுத்தி விடையளித்திருக்கப்பட வேண்டும்)**

**(2 × 2 புள்ளிகள் = 04 புள்ளிகள்)**

**6.** தொலைக்காட்சி நாடகமொன்றின் வெளியீட்டு நிகழ்வில் நடிகர்களின் அறிமுகம் கவருந்தன்மையானதாக இருந்தது.

(i) பிரதான நடிகரைவிட தொலைக்காட்சி நாடகத்தின் பிரதான நடிகையின் சரும நிறம் கருமையானதாக இருந்தமை நிகழ்வில் பொதுவாகப் பேசப்பட்டது, எந்த எண்ணக்கருவின் கீழ் இது விபரிக்கப்பட முடியும்?

**(01 புள்ளி)**

ஆண் – பெண் சமூகத் தன்மை

(ii) மேற்குறித்த நிகழ்வில் எடுக்கப்பட்ட புகைப்படங்கள் குறைந்த செய்திப் பெறுமதி கொண்டவையாக இருந்தன. அதற்கான இரண்டு காரணங்களை எடுத்துரைக்குக.

- காலத்திற்குப் பொருத்தமற்றதாக உள்ளமை.
- முரண்பாடுகள் அற்றதாக உள்ளமை.
- தாக்கங்கள் அற்றதாக உள்ளமை.
- அண்மித்த தன்மையற்றதாக உள்ளமை.
- அசாதாரண தன்மையற்றதாக உள்ளமை.
- புதுமைகள் அற்றதாக உள்ளமை.
- மானுட விருப்பங்கள் அற்றதாக உள்ளமை.

**(2 × 1புள்ளி = 02 புள்ளிகள்)**

(iii) தொலைக்காட்சி நாடகமொன்றில் நிலைத்த புகைப்படங்கள் பயன்படும் மூன்று சந்தர்ப்பங்களைச் சுருக்கமாக விபரிக்குக.

- படப்பிடிப்பின்போது பாத்திரங்கள், காட்சியினது தோற்றங்கள், ஆடை அணிகள், பின்னணி என்பவற்றின் தொடர்ச்சித் தன்மையினைப் பேணுவதற்கு.
- நாடகம் தொடர்பான பரப்புரைகளுக்காக தயாரிக்கப்படும் விளம்பரங்கள், பதாதைகள், பட அட்டைகள் மற்றும் பிரசுரங்கள் என்பவற்றில் பயன்படுத்துவதற்கு.
- தொலைக்காட்சி நாடகத்துறையில் பணியாற்றும் கலைஞர்களின் தரவுகள் மற்றும் தகவல்களை வழங்குவதற்கு, பிரபல்யப்படுத்துவதற்கு மற்றும் தனிப்பட்ட நினைவேடுகளுக்கு.
- தொலைக்காட்சி நாடகங்கள் தொடர்பான சஞ்சிகைகள் மற்றும் ஆக்கங்களில் பிரசுரிப்பதற்கு.
- தொலைக்காட்சி நாடகங்கள் தொடர்பான கற்றல் நடவடிக்கைகளில் ஈடுபடும் மாணவர்கள் பயன்படுத்துவதற்கு.
- குறித்த நிகழ்வுகள், இடங்கள், ஆட்கள் பற்றிய ஒளிப்பதிவுகள் இல்லாதபட்சத்தில் குறித்த காட்சிகளில் பயன்படுத்துவதற்கு.
- அச்சு ஊடகங்களில் நாடகம் தொடர்பாக வெளிவரும் விளம்பரங்கள் மற்றும் சிறப்புக் கட்டுரைகளில் பயன்படுத்திக் கொள்வதற்கு.

**(3 ×1 புள்ளி = 03 புள்ளிகள்)**

(iv) 'அரசாங்கத் தொலைக்காட்சி ஊடக நிறுவனங்களுக்கும் அரசாங்கத்திற்கும் இடையேயான உறவு' பற்றி பின்வரும் அம்சங்களின் பேரில் கட்டுரையொன்றைத் தயாரிக்குக.

(அ) அரசாங்கத்தின் அபிவிருத்தி நிகழ்ச்சித் திட்டங்கள் பற்றி விழிப்புணர்வை ஏற்படுத்துதல்

(ஆ) அரசாங்கத்திற்குச் சார்பான பொதுசன அபிப்பிராயத்தைப் பேணுதல்

**(அ) அரசாங்கத்தின் அவிவிருத்தி நிகழ்ச்சித் திட்டங்கள் பற்றி விழிப்புணர்வை ஏற்படுத்துதல்**

- தம்மைப் புறந்தள்ளுவதான பொதுமக்களின் விமர்சனங்களைச் சமநிலைப்படுத்த அரச தொலைக்காட்சி நிறுவனங்கள் உதவமுடியும்.
- அரசாங்கம் பற்றிய நல்ல விம்பத்தைப் பொதுமக்களிடம் கட்டமைத்துக் கொள்வதற்கு அரச தொலைக்காட்சி நிகழ்ச்சிகள் உதவக்கூடும்.
- அரசாங்க நிகழ்ச்சித் திட்டங்கள் பற்றிய புகார்கள், முறைப்பாடுகள் இருப்பின் அவற்றை மக்களுக்குத் தெளிவுபடுத்த அரச தொலைக்காட்சி ஊடகங்கள் உதவ முடியும்.
- அரசாங்க நிகழ்ச்சித்திட்டங்கள் பற்றிய ஆதாயங்களை மக்களுக்கு எடுத்துச் சொல்ல முடியும்.
- மக்களையும் பங்குதாரர்களாக இணைத்துக் கொண்டு அரசாங்க நிகழ்ச்சித் திட்டங்கள் பற்றிய முன்னறிவித்தலை விடுத்து அவற்றை மேம்படுத்த முடியும்.

**(ஆ) அரசாங்கத்திற்குச் சார்பான பொதுசன அபிப்பிராயத்தைப் பேணுதல்**

- அரசாங்க நிகழ்ச்சித் திட்டங்கள் பற்றிய நேர்மையான அபிப்பிராயங்களை மக்கள் மத்தியில் ஏற்படுத்த அரச தொலைக்காட்சிகள் உதவ முடியும்.
- அரசாங்க நிகழ்ச்சிகள் பற்றிய குறைபாடுகள், விமர்சனங்கள் இருக்கும்பட்சத்தில்

அவற்றிற்கான தெளிவூட்டலை மக்களுக்கு வழங்க அரச தொலைக்காட்சிகள் உதவ முடியும்.

- அரச நிகழ்ச்சித் திட்டங்கள் பற்றிய தகவல்களையும் விபரங்களையும் மக்களிடம் எடுத்துச் செல்ல அரச தொலைக்காட்சிகள் வழிசெய்யும்.
- அரச நிகழ்ச்சித் திட்டங்கள் பற்றிய பரப்புரைகளையும் தேவையான தகவல்களையும் அரச தொலைக்காட்சிகளில் வழங்குவதற்குச் சந்தர்ப்பங்கள் காணப்படுகின்றன.

**(2 x 2 = 04 புள்ளிகள்)**

7. ஊடக விமர்சனத்தில் செய்தியொன்றைத் தனித்து நோக்குவது நியாயமற்றது.

(i) செய்தியொன்றால் முன்வைக்கப்படும் சிந்தனையைத் தீர்மானிக்கும் அம்சமொன்றைப் பெயரிடுக.

- ஊடக நிறுவனத்தின் உரிமை.
- ஊடகத்துடன் தொடர்புடைய சமூக, பொருளாதாரக் காரணிகள்.
- குறித்த காலப்பகுதியில் நிலவும் அரசியற் சூழல்.
- பண்பாட்டுப் பின்னணி.

**(01 புள்ளி)**

(ii) விமர்சனத்திறனுள்ள பெறுநர் ஒருவர் அவசியம் கொண்டிருக்க வேண்டிய இரண்டு தேர்ச்சிகளை எடுத்துரைக்குக.

- ஊடகத்தின் வழியாக முன்வைக்கும் விடயங்களைச் சரியாக விளங்கிக் கொள்ளும் திறன்.
- ஊடகத்தின் ஊடாக மறைக்கப்படுபவை எவை என விளங்கிக் கொள்ளும் திறன்.
- ஊடக நிறுவனங்கள் எந்தக் குறிக்கோளுடன் செயற்படுகின்றன என்பதனைப் புரிந்துகொள்ளும் திறன்.
- ஊடகங்களினால் மேற்கொள்ளப்படும் முயற்சிகள் தன்னை எத்தகைய நபராக ஆக்குகின்றது என்பதனை நன்கு விளங்கும் திறன்.
- பெறுநரைத் தூண்டுவதற்கு ஊடகங்கள் மேற்கொள்ளும் தந்திரோபாயங்களை விளங்கிக் கொள்ளும் திறன்.
- ஊடகங்களினால் வழங்கப்படும் தகவல்களில் தமக்குத் தேவையானவற்றை மாத்திரம் வடிகட்டிப் பெற்றுக் கொள்ளும் திறன்.
- ஊடகச் செயற்பாடுகள் தொடர்பான தமது துலங்கலை தனிப்பட்டரீதியிலும், சமூகமாகவும் ஊடக நிறுவனங்களுக்குத் தெரியப்படுத்துவதன் மூலம் ஊடகங்களுடன் இடைத்தொடர்பைப் பேணுவதற்குரிய ஆற்றல்.

**(2 x 1 புள்ளி = 02 புள்ளிகள்)**

(iii) வானொலி ஊடகத்திற்குப் பிரதியை எழுதும்போது அவசியம் நிறைவேற்றப்பட வேண்டிய மூன்று நிபந்தனைகளை விபரிக்குக.

- மொழிநடை – எழுதுவது வாசிப்பதற்கல்ல, பேசுவதற்கு. அது எழுத்துப் பயிற்சி அல்ல, பேச்சுச் செயற்பாடு.
- தொடர்பாடல் அடிப்படை – ஒருவரை விளித்து எழுதவேண்டும், அதாவது தனிப்பட்ட தொடர்பாடல் இடம்பெறல் எதிர்பார்க்கப்படுகின்றது. இருவருக்கிடையிலானது, எனவே தொகுப்பாளருக்கும்



[ Downloaded from Past Papers Wiki - Most Extensive Wikipedia of Past Papers! ]

நேயர்களுக்குமிடையில் நட்புரீதியான தொடர்பினைக் கட்டியெழுப்புதல் வேண்டும்.



- செவிமடுக்கும் அடிப்படை - நேயர்களால் ஒருதடவையே செவிமடுக்கக்கூடியதாக இருப்பதால் செவிமடுக்கும் முதற்சந்தர்ப்பத்திலேயே நேயரால் விளங்கிக்கொள்ளக்கூடிய வகையில் எழுத வேண்டும்.
- ஒலி அடிப்படை - ஒலியை மாத்திரம் பயன்படுத்துவதால் ஒலி மூலம் அனைத்து விடயங்களையும் மனதில் பதியச்செய்யும் வண்ணம் எழுதவேண்டும்.

**(3 ×1 புள்ளி =03 புள்ளிகள்)**

(iv) "சமூக ஊடகங்களைப் புரிந்துணர்வுடன் பயன்படுத்துவோம்" என்பது பற்றி பாடசாலைக் காலைக் கூட்டத்தில் ஆற்றவேண்டிய உரையொன்றின் மாதிரியை நான்கு அம்சங்களின் பேரில் தயாரிக்குக.

- தன்னைப்பற்றிய உண்மையான தகவல்களை மறைப்பதைத் தவிர்த்தல்.
- மற்றவர்களை ஏமாற்றும் வகையில் செயற்படாமை.
- இணையத்தில் பிழையான மற்றும் உண்மைக்குப் புறம்பான தகவல்களைச் சேர்ப்பதைத் தவிர்த்தல்.
- தேவையற்ற நபர்களுக்கு தனிப்பட்ட தகவல்களை வழங்குவதைத் தவிர்த்தல்.
- சமூக ஒழுங்கமைப்புக்குத் தீங்கு விளைவிக்காத வகையில் பயன்படுத்தல்.
- மற்றவர்களது அக உரிமையில் பாதிப்பை ஏற்படுத்தாது செயற்படுதல்.
- பெறப்பட்ட தகவல்கள் தேர்ந்தெடுக்கப்பட்டுப் பகிர்தல் வேண்டும்.
- சட்டக்கட்டுப்பாடுகளைப் புரிந்துக் கொண்டு செயற்படுதல் வேண்டும்.
- புதிய ஊடக விளங்கறிவுடன் புதிய ஊடகத்தைப் பயன்படுத்தல் வேண்டும்.

**(கூட்டத்தில் ஆற்றவேண்டிய உரை போன்று பதில் எழுதப்பட்டிருத்தல் வேண்டும்.)**

**(4 ×1 புள்ளி =04 புள்ளிகள்)**

PAST PAPERS WIKI

WWW.PastPapers.WiKi



[ Downloaded from Past Papers Wiki - Most Extensive Wikipedia of Past Papers! ]


LOL.lk
BookStore
විභාග ඉලක්ක
පහසුවෙන් ජයගන්න
ඕනෑම පොතක් ඉක්මනින්
නිවසටම ගෙන්වා ගන්න
කෙටි සටහන් | පසුගිය ප්‍රශ්න පත්‍ර | වැඩ පොත් සඟරා | O/L ප්‍රශ්න පත්‍ර |
A/L ප්‍රශ්න පත්‍ර | අනුමාන ප්‍රශ්න පත්‍ර | අතිරේක කියවීම් පොත් |
School Book ගුරු අතපොත්
PADANAMA PUBLICATION
pesuru Prakashana Private Ltd.
Akura Pilot
සමනල දැනුම
සතර
පෙර පාසලේ සිට උසස් පෙළ දක්වා සියළුම ප්‍රශ්න පත්‍ර,
කෙටි සටහන්, වැඩ පොත්, අතිරේක කියවීම් පොත්, සඟරා
සිංහල සහ ඉංග්‍රීසි මාධ්‍යයෙන් ගෙදරටම ගෙන්වා ගැනීමට
www.LOL.lk වෙබ් අඩවිය වෙත යන්න